செ.வெ.எண். 242/2009(செமதொஅ) நாள் : 10.08.2009.

**<u>ஒரே முறை தீர்வு திட்டத்தின் கீழ் விற்பனை வரி நிலுவைத் தொகையை செலுத்த வணிகர்களுக்கு கூடுதல் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா,இ.ஆ.ப. தகவல்.</u>**

ஒரே முறை தீர்வுத் திட்டத்தின் கீழ், வணிகர்களின் 01.04.2002-ஆம் தேதிக்கு முன்னதாக உள்ள விற்பனை வரி நிலுவைகள் தீர்வு தொடர்பாக தமிழக அரசு 01.11.2008ல் சட்டம் இயற்றியது. இச்சட்டத்தின் கீழ் நிலுவைகளை தீர்வு செய்ய வணிகர்கள், உரிய அலுவலர்களிடம் விண்ணப்பங்களை சமர்பிக்க 31.03.2009 வரை கால அவகாசம் கொடுக்கப்பட்டது. இத்திட்டத்தினை வேண்டி வணிகர் சங்கங்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் 2009-2010ஆம் ஆண்டுக்கான வணிகவரித் துறை மானிய கோரிக்கையின் போது தமிழக சட்டமன்றத்தில் அறிவித்தபடி, வணிகவரி நிலுவைக்கான ஒரே முறை தீர்வுத் திட்டத்தை 02.11.2009 வரை நீட்டிப்பு செய்து தமிழக அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த வணிகர்கள் இந்த வாய்ப்பினை தவறாமல் பயன்படுத்தி, உடனடியாக 02.11.2009 ஆம் தேதிக்குள் தங்களது விற்பனை வரி நிலுவைகளை தீர்வு செய்யுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தோஷ் கே.மிஸ்ரா,இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்.